பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 19] சென்னை : ஐப்பசி 12 (29—10—71) வெள்ளி வெளியூர் : ஐப்பசி 13 (30—10—71) சனி [இதழ் : 113

15 ஆண்டுக் காலத்தில் முதல் நிகழ்ச்சி

இந்தியப் பத்திரிகையாளர்கள் சீனு செல்கின்றனர்

புதுடில்லி, அக். 29—
கடந்த 15 ஆண்டுகளில் முதல் தடவையாக இப்போது இரு இந்தியப் பத்திரிகையாளர்கள் சீனு செல்கின்றனர்.

பீகிங்கில் நடைபெறவிருக்கும் ஆசிய -- ஆப்பிரிக்க டேபிள் டென்னிஸ் போட்டியில் கலந்து கொள்ளச் செல்லும் குழுவுடன் இந்த இரு செய்தியாளர்களும் செல்கின்றனர்.

தாக்க முனைந்தால் தக்க பாடம் கற்பிக்கப்படும்

எதிரிகளுக்கு இந்திய விமானப் படைத் தளபதி எச்சரிக்கை

சண்டிகார், அக். 29—
"நமது நாட்டிற்கு எதிராகப் போர் மிரட்டல் செய்யப்படுகிறது; நாம் தாக்கப்படக் கூடும்; தாக்குதல் எப்போது நடக்கும் என்பது தெரியாது; எனினும், நாம் தயாராக இருக்க வேண்டியது அவசியமாகும்"

என்று, இந்திய விமானப் படைத் தலைமைத் தளபதி பி. சி. லால் எச்சரித்திருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசுகை அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாமீது ஆக்கிரமிப்பு நடந்தால் இந்திய விமானப் படை தக்க பதிலடி கொடுத்தே தீரும்.

"1965-ல் நடந்த பாகிஸ்தானி ஆக்கிரமிப்புக்குப் படையின் செயல் திறன் பெரிதும் மேம்பாடு பெற்றிருக்கிறது; இந்திய விமானப் படை மேலும் நவீனமாக்கப்பட்டு வலுவாக்கப்பட்டிருக்கிறது; யாராவது ஆக்கிரமிப்புச் செய்தால் அது மிகச் சிறப்பாகச் செயலாற்றும்."

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"பாகிஸ்தான் பெற்றுள்ள 'மிராஜ்' விமானம் நல்ல விமானமாகும்; நம்மிடமும் நல்ல விமானங்கள் இருக்கின்றன.

"போரை இந்தியா விரும்பவில்லை; ஆனால் யாராவது நமது நாட்டைத் தாக்கினால் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கப்படும்."

அஞ்சல் துறை ஊழியர் மீதான வழக்குகள்

அனைத்தையும் கைவிட முடிவு

பெல்காம், அக். 29—
"1969-ல் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதற்காக அஞ்சல் -- தந்தி ஊழியர்கள்மீது தொடரப்பட்டிருந்த வழக்குகளைக் கைவிடுவது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று மத்திய அமைச்சர் பகுகுணா அறிவித்திருக்கிறார்.

ஐந்தாம் படையை ஏவி விட்டிருக்கிறது பாகிஸ்தான்

சாதுக்கள் வேடத்தில் ஒற்றர்கள் ஊடுருவல்

பதிந்தா (பஞ்சாப்), அக். 29—
கடந்த மூன்று நாட்களில் 3 பாகிஸ்தான் உளவாளிகள் இங்கு கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஒருவர் துறவி வேடத்திலும், இருவர் பிச்சைக்காரர் வேடத்திலும் உளவு வேலையில் ஈடுபட்டிருந்தனராம்.

இவர்களிடமிருந்து ஒரு கம்பியில்லாத் தந்திக் கருவியும், சில சான்றேடுகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

"பாகிஸ்தான் உளவாளிகள் பெரும்பாலோர் துறவிகள் வேடத்திலும், பிச்சைக்காரர்கள் வேடத்திலுமே காணப்படுன்றனர்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்கதேசப் பிரச்சினை :

'இந்தியா -- பாகிஸ்தானை சமநிலையில் வைக்கச் சில நாடுகள் முயற்சிக்கின்றன'

இந்திரா காந்தி கடுந்தாக்கு

'இந்தப் போக்கினால் பயன் ஏதும் ஏற்படாது' என அறிவிப்பு

வியன்னா, அக். 29—
வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவையும் – பாகிஸ்தானையும் சமநிலையில் வைக்க முயற்சிக்கும் நாடுகளைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கடுமையாகத் தாக்கினார்; 'இந்தப் போக்கினால் பயன் எதுவும் ஏற்படாது' என்றார்.

"எல்லையிலிருந்து இரு தரப்பிலும் படைகள் வெளியேற வேண்டும்" எனற இப்போது யோசனை கூறும் நாடுகள் 'எல்லைப் பகுதிக்குப் பாகிஸ்தான் படைகள் வந்தபோது ஏன் வாய்மூடிக் கிடந்தன?

அப்போது ஐ. நா.-வோ அல்லது உலக நாடுகளோ ஏன் கவலை தெரிவிக்கவில்லை? நாட்டின் பாதுகாப்பையொட்டி எங்கள் இராணுவத்தை நாங்கள் எல்லைப் பகுதியில் நிறுத்துகின்றபோதுதான் உலக நாடுகள் கவலை காட்டுகின்றன" என்றெல்லாம் அவர் சுட்டிக் காட்டினார்.

"பல இலட்சக்கணக்கான மக்களைப் பாகிஸ்தான் கொன்று குவித்திருக்கிறது; இதுபற்றி உலகம் என்ன சொல்கிறது" என்று அவர் வினவினார்.

சுதந்தர வங்காளம் அங்கீகரிக்கப்படும் நிலை

வியன்னாவில், டெலிவிஷன் பேட்டி ஒன்றில் அவர் மேலும் கூறியதாவது:—

"வங்காள தேசப் பிரச்சினையின் தீர்வுக்கு உதவும் என்றால், சுதந்தர வங்காள தேசத்தை அங்கீகரிப்பதுபற்றி இந்தியா பரிசீலிக்க வேண்டியிருக்கும்.

வங்காள தேச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் விருப்பங்களுக்கு இசைவாக ஒரு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் முன்பைவிட இப்போது குறைவாகும்; ஏனெனில், வங்காள தேச மக்களின் பிரதிநிதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்; மக்கள் ஆதரவு பெறாதவர்கள் அவர்களுக்குப் பதிலாகப் பிரதிநிதிகளாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

முஜிபுர் ரகிமான் என்ன ஆனார்?

ஷேக் முஜிபுர் ரகிமான் உயிருடன் இருக்கிறாரா என்று எங்களுக்குத் தெரியாது; அவர் உயிருடன் இருக்கிறார் என்றால், அவருடன் பேச்சு நடத்தலாம்.

ஓடிவந்த அகதிகள் தாயகம் திரும்புவரா?

வங்காள தேச அகதிகள் தாயகம் திரும்பவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

வங்காள தேசத்தில் கொடுமைகள் தொடர்ந்து நடக்கும் நிலையில், அகதிகள் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்ப்பது கண்கூடான நிலைக்கு ஒவ்வாததாகும்."

மரணப் பிடியில் 90,000 குழந்தைகள்

சத்துணவு பற்றுக்குறையால் அகதிகள் முகாமில் அவதி

புதுடில்லி, அக். 29—
"போதுமான சத்துணவு இல்லாத காரணத்தினால், வங்க அகதிகளில் 90,000 குழந்தைகள், இன்னும் மூன்று வார காலத்திற்குள் இறக்க நேரிடும்"

என்று இந்திய சுகாதார இயக்குநர் ஜே. ஸ்ரீவத்சவா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இதுதொடர்பில் அவர் கூறியதாவது:—

"இந்தியா வந்துள்ள வங்க அகதிகளின் முகாம்களில் 40 இலட்சம் குழந்தைகள் இருக்கின்றன; இவர்களில் இரண்டு இலட்சம் குழந்தைகள் போதுமான சத்துணவு இன்றி நோயால் வாடிக் கொண்டிருக்கின்றன.

இவர்களில் 1,15,000 குழந்தைகள் நகர இயலும்; மீதியுள்ள குழந்தைகள் நகர இயலாத நிலையில் இருக்கின்றன.

"இன்னும் மூன்று வார காலத்திற்குள் அந்தக் குழந்தைகளுக்குச் சத்துணவும் -- மருத்துவ உதவியும் அளிக்கவில்லை என்றால், 90,000 குழந்தைகளும் மடிந்துபோகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

"இந்தக் குழந்தைகளைக் கவனிப்பதற்குச் செஞ்சிலுவைச் சங்கமும் -- இந்திய அரசும் உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன."

ஆக்கிரமிப்பைச் சமாளிக்கத் தயார்

பழைய நிலையில் இன்று நாடு இல்லை

பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் அறிவிப்பு

புதுடில்லி, அக். 29—
'இந்தியாவின் கிழக்கு அல்லது மேற்கு எல்லையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புச் செய்யுமானால், அதைச் சமாளிக்க நாடு தயார் நிலையில் இருக்கிறது"

என்று வெளிவிவகார அமைச்சர் சுவரண் சிங் உறுதி கூறினார்.

வெளிவிவகார அமைச்சக நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தானுடன் போர் மூண்டால், 1965-ல் இருந்த நிலவரம் இப்போது இராது; அப்போது பிரிட்டிஷ் இராணுவ தளவாடங்களை இந்தியா பயன்படுத்திக் கொண்டிருந்தது; இப்போது அந்த நிலை மாறிவிட்டது.

"இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் பல்வேறு வகைகளில் கணிசமாகப் பெருகியிருக்கின்றன."

செஞ்சீனாவின் போக்கு!

பீகிங், அக். 29—
சீனாவை சேர்த்துக் கொண்டும்-- தைவானை வெளியேற்றியும் ஐ. நா. சபை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பினும்கூட, கம்யூனிஸ்டுச் சீனா இதை அப்படி ஒன்றும் பெரிதாக மதிக்கவில்லையாம்.

இந்தச் செய்தியை அதற்குரிய முக்கியத்துவத்துடன் அதுவெளியிடாததுடன், ஐ. நா.-வில்தனது நீதி என்ன என்றோ, தூதுக் குழுவினர் எப்போது செல்லப் போகின்றனர் என்றோ எந்த விதத் தகவலையும் வெளியிடாமல் இன்னமும் மௌனமாகவே இருந்து வருகிறது!

யாகியா கானின் தான்தோன்றித் தர்பார்

புதுடில்லி, அக். 29—
கிழக்கு வங்கத்தில் இதற்குமுன் நடைபெற்ற தேர்தலில் அவாமி லீகினால் தோற்கடிக்கப்பட்ட அத்தனைக் கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களில் பலரும்

(4-ம் பக்கம் பார்க்க)

சீனாவுடன் நல்லுறவு கொள்ளும் நடவடிக்கை

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

புதுடில்லி, அக். 29—
வெளிநாட்டு உறவுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டம் ஒன்றில், இந்திரா காங்கிரசு உறுப்பினர் அர்சுன் அரோரா உட்பட பலர், 'சீனாவுடன் உறவை வளர்த்துக்கொள்ள ஏன் இந்தியா நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வரவில்லை' என்று கடிந்துகொண்டிருக்கின்றனர்.

"பீகிங்கில் உடனடியாக முழுத் தகுதியுடைய தூதுவரை ஏற்படுத்தி உறவை வலுப்படுத்த வேண்டும்" என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

இதற்குப் பதிலளிக்கையில், வெளிநாட்டு அமைச்சர் சுவரண் சிங் கூறியதாவது:—

"இந்திய வெளியுறவுத் துறை அடிக்கடி சீனத் தூதுவரிடம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு வருகிறது.

பீகிங்கில் இப்போது தூதுவராக இருப்பவர் முதிர்ந்த ஓர் அதிகாரியேயானார்; அவரும் அடிக்கடி சீன அரசுடன் தொடர்பு கொண்டு வருகிறார்."

நெஞ்சம் நெக்குரும் நிகழ்ச்சிகள்

இலட்சக்கணக்கான மனித உயிர்கள் ஏற்றுள்ள இன்னல்கள்

உலக நாடுகளுக்கு சோவியத் அறிவிக்கும் உண்மை — வாளாவிருக்கக் கூடாது என வலியுறுத்தல்

"கிழக்கும் பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள இலட்சக்கணக்கான அகதிகள், உள்ள முருக்கும் துயர நிலையில் வாழ்ந்து வருகின்றனர்; அந்த மக்களின் நிலை குறித்து உலக முற்போக்கு மக்கள் கவலையுருதிருக்க முடியாது.

"தங்களது தாயகத்தில் நிலவும் சகிக்கவொண்ணு நிலைமைகளின் காரணமாகத்தான், அந்த அகதிகள் இந்தியாவுக்குள் தஞ்சமடைந்துள்ளனர் -- என்று பல நாடுகளைச் சேர்ந்த பத்திரிகைகளும் கோடிட்டுக் காட்டியுள்ளன.

"தங்கள் வீடு வாசல்கள்--சொத்து சுகங்கள் அனைத்தையும் விட்டு விட்டு அண்டை நாட்டில் தஞ்சம் புகுமாறு செய்த பாகிஸ்தானிய அதிகாரிகளின் செயல் கண்டு அனைவரும் ஆத்திரமடைந்துள்ளனர்; அச்செயல் முறைகளுக்கு எவ்வித நியாயமும் கிடையாது.

"இலட்சோப இலட்சம் அப்பாவி மக்களின் அவதிகளையும் இன்னல்களையும் கண்டு உலக மக்கள் வாளாவிருக்க முடியாது; மீண்டும் அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு உகந்த சூழ்நிலைகளைப் பாகிஸ்தானிய அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும்; அந்த மக்களுக்கு அமைதியான வாழ்க்கை உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்"

என்று, இரஷ்ய அரசின் அதிகாரபூர்வமான ஏடான 'பிராவ்தா' வலியுறுத்தி எழுதியுள்ளது; அந்த ஏட்டில் எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"...... அவர்கள் மௌனமாக நடந்து வருகின்றனர்; சோகமே உருவான அந்த மனிதர்கள் -- எண்ணற்றோர் நடந்து வரும்போது அவர்களது வெற்றுக்கால்கள் சகதியில் புதையும் இசை மட்டுமே அங்கு எழும் சப்தமாகும்; இந்த 'ஊர்வலத்' திற்கு முடிவே இல்லை.

நடக்கச் சக்தியுள்ளவர்கள், நடக்கச் சக்தியற்ற குழந்தைகளையும் -- வயோதிகர்களையும் -- நோய்வாய்ப்பட்டோரையும் சுமந்து வருகின்றனர்; அவர்களது தலைகளைச் சுற்றி ஒரு கந்தல் துணி -- அதுதான் அவர்களை மழையிலிருந்து காப்பாற்றும் 'கருவி'!

மௌனமான அந்தப் பெருங் கும்பலிலிருந்து சில வேளைகளில் குழந்தைகளின் அழுகுரல்கள் எழுகின்றன.

பலரது கால்களிலும் நடந்து நடந்து ஏற்பட்ட சிராய்ப்புக்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது!

பலர் காலராவினுல் பிடிக்கப்பட்டவர்கள்; வரும் வழியிலேயே அவர்களில் யாரேனும் இறந்தால், இறந்த உடலை புதைப்பதற்கு ஆளில்லை.

பிணந்தின்னும் கழுகுகளும் -- காக்கைகளும் மேலே வட்டமிட்டுக்கொண்டுள்ளன; அழுகிக் கிடக்கும் பிரேதங்களைக் கடந்து செல்லும் அந்த மனிதர்கள் துர்நாற்றத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காகத் துணியால் மூக்கை மூடிக்கொண்டு செல்கின்றனர்; இந்தக் கூட்டத்திற்கு முடிவேயில்லை; இரவும் பகலும் சாரிசாரியாக வந்து கொண்டேயுள்ளனர்?"

கிழக்குப் பாகிஸ்தானுக்கும் -- இந்தியாவுக்கும் இடையேயுள்ள எல்லையில் தாம் கண்ட காட்சியை மேலே கண்டவாறு விவரித்துள்ளார் 'டைம்' நிருபர்; அந்த மக்கள்தான், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வரும் அகதிகள்.

சென்ற சில மாதங்களாக நாள்தோறும் அவ்வாறு ஆயிரக்கணக்கான மக்கள் இந்தியாவுக்குள் வந்து கொண்டேயுள்ளனர். இதுவரை அவ்வாறு வந்திருப்போரின் தொகை 85 இலட்சம் என்று சில நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது; இப்போதோ அது 90 இலட்சத்தையும் தாண்டிவிட்டது.

இவ்வாறு வந்திருப்பவர்களில் பெருவாரியானவர்கள் -- ஏறக்குறைய 70 இலட்சம் பேர் -- மேற்கு வங்காளத்தில் தங்கியுள்ளனர்; மீதிப் பேர் திரிபுராவிலும், மேகாலயாவிலும், அசாம்--பீகார் மாநிலங்களிலும் தங்கியுள்ளனர்.

"கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு என இந்தியாவில் 600 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன" என்று இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்த முகாம்களில் ஒரு நெருக்கடியான நிலை நிலவுகின்றது; நெரிசல்—மருத்துவ வசதிகள் பற்றுக் குறை—சுகாதார வசதிகளின்மை—உணவு நெருக்கடி—தொத்து நோய் இவற்றின் காரணமாகப் பல அகதிகள் இறந்துபடுகின்றனர்.

இந்த முகாம்வாழ் அகதிகளின் துயரை, மழை மேலும் அதிகரிக்கிறது; பருவ மழை விடாது பெய்து கொண்டிருப்பதால், பல முகாம்களும் சேற்று ஏரியாகக் காட்சியளிக்கிறது.

கிருஷ்ண நகர் அருகேயுள்ள ஓர் அகதிகள் முகாமைச் சென்று பார்வையிட்டு வந்த 'பிராவ்தா' நிருபர், அரசாங்கக் கால்நடைப் பண்ணை ஒன்றில் 64,000 அகதிகள் தங்கியிருப்பதாகவும், கால்நடைச் சாணம் நிறைந்த கொட்டகைகளில் அவர்கள் விரிப்பு ஏதுமின்றிப் படுத்துத் தூங்குகின்றனர் என்றும் கூறுகிருர்.

"ஒவ்வொரு கொட்டகையிலும் 5,000 பேர் தங்குகின்றனர்; நாளொன்றுக்கு 20 பேர் காலராவினுல் அங்கு செத்துக் கொண்டுள்ளனர்" என்று அந்த முகாமின் கண்காணிப்பாளரான பார்வா கூறுகிருர்.

"உணவு—மருந்து—போர்வை அனைத்தும் பற்றுக்குறை; இந்த முகாமுக்கு 3 டாக்டர்கள்தான் உள்ளனர்" என்கிருர் அவர்.

இத்தகைய முகாம்களில் வாழும் அகதிகளின் நிலை கொடுமையானது என்ருல் அதையும்விடக் கொடிய நிலையிலிருந்துதான் தான் அவர்கள் தப்பித்து வந்துள்ளனர் என்கிறது 'டைம்' சஞ்சிகை; பாகிஸ்தான் இராணுவத்தினர் இழைத்த பயங்கரக் கொடுமைகளும் -- சித்திரவதையும் -- கொலையும் -- இந்த அகதிகள் ஒவ்வொருவரது நினைவிலும் நிற்கிறது!

"அவர்கள் அனைவரும் இந்துக்கள் அல்லர்; பாகிஸ்தானிய இராணுவ வீரர்களின் இனத்தையே சேர்ந்த முஸ்லிம்களும் அத்தகைய கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு -- அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ளனர்" என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

அகதிகளின் துயரைத் துடைப்பதற்கென இந்திய அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது; நடப்பு ஆண்டில் அகதிகளின் பராமரிப்புக்கென ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; எனினும், தற்போது வந்து கொண்டுள்ள அகதிகளின் தொகையைப் பார்த்தால்—நாளொன்றுக்கு 30,000 பேர்—அடுத்த ஆறு மாதங்களுக்கு மட்டுமே ரூ. 400 கோடி தேவைப்படும் என்று இந்திய அரசாங்கத்தின் செய்தித் துறை அலுவலகம் அறிவித்துள்ளது.

போலீசாருக்கு உதவும் புதிய கருவி

ரோந்து சுற்றும் போலீசார் பயன்படுத்துவதற்குப் புதிய கருவி ஒன்று இலண்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எந்த மூலையில் சுற்றிக்கொண்டிருந்தாலும், அங்கிருந்தபடியே தலைமையகத்திற்குத் தகவல் கொடுக்கும் இந்தக் கருவி, ஒரு படம் மூலம் வண்டியின் நடமாட்டத்தையும் தலைமையகத்திற்கு தெரிவிக்கவல்லது.

தகவலைத் தலைமையகத்திற்கு அனுப்பும் அதே நேரத்தில், கம்பியூட்டர் தகவல் நிலையம் பயன்பாட்டுக்காக 'டேப்' பதிவு செய்யும் வேலையும் கூடவே நடக்கிறது; நாம் ஒலிபரப்பும் செய்தி, தானே 'டைப்' ஆகி -நாம் என்ன சொன்ளேம் என்பதற்கான தகவல் பிரதியும் கிடைக்கச் செய்கிறது இந்தக் கருவி.

இவ்வளவு பயனுள்ள இந்தக் கருவி ஒரு சிறிய டிரான்சிஸ்டர் ரேடியோ அளவுக்குத்தான் இருக்கிறது; 'புஷ் பட்டன்' அமைப்பில் இருக்கும் இந்தக் கருவியை டிரைவர் இருக்கைக்கு முன்பு பொருத்திக்கொள்கிருர்கள்; இந்தப் பித்தானை அமுக்கினுல் கருவி இயங்க ஆரம்பிக்கிறது; 1½ விநாடிகளுக்குள் தகவல்களை அனுப்பிவிடும்; உலகிலேயே முதல் நூதனம் இது!

வேடந்தாங்கலில் பறவைகள் வருகை

சென்னை, அக். 28—

வேடந்தாங்கல் ஏரியில் தண்ணீர் வரத் தொடங்கிவிட்டது; இன்னும் சில நாட்களில் ஏரி நிரம்பிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே பறவைகள் வரத் தொடங்கிவிட்டன; ஏரி நிரம்பியதும் முழு அளவுக்குப் பறவைகள் வந்து சேர்ந்துவிடும்.

சுற்றுலாப் பயணிகளும் கார்களிலும், பஸ்களிலும் வந்து கொண்டிருக்கின்றனர்.

மரங்களின் வளர்ச்சி -- முன்கூட்டி அறிவிக்கும் கருவி

பிரிட்டனில் கண்டுபிடிப்பு

இலண்டன், அக் 22—

வனத்துறை அதிகாரிகளுக்கு மிகவும் பயன்படக்கூடிய கம்பியூட்டர்' இயந்திரம் ஒன்று பிரிட்டனில் தயாராகி வருகிறது.

காடுகளில் மரங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் தன்மை ஆகியவை பற்றி முன்கூட்டியே அறிவிக்கக்கூடியது இந்த கம்பியூட்டர்!

1964-ம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட காட்டில் வளர்ந்திருந்த மரங்களின் குறுக்களவு -- உறுதி -- தன்மை ஆகிய விவரங்களைச் சேகரித்து இந்தக் கம்பியூட்டருக்குள் திணித்தார்கள்; அந்த இயந்திரம் உள்ளுக்குள்ளேயே ஏதேதோ கூட்டல் -- கழித்தல் எல்லாம் செய்துகொண்ட பிறகு, இனி வரும் காலத்தில் அந்தப் பகுதியில் மரங்களின் வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதையும், அறுத்துப் பார்த்தால் அவற்றின் தன்மை எப்படியிருக்கும் என்பதையும் சொல்கிறது.

சென்னை நகரில் நிலம் வைத்திருப்போர் கவனிக்க:

சென்னை, அக் 29—

நகர்ப்புற நில வரிச் சட்டப்படி, சென்னை நகரில் ஒரு கிரவுண்டுக்கு (2400 சதுர அடி) நிலம் வைத்திருப்பவர்கள் வரி கட்ட வேண்டும்; ஆகவே, ஒரு கிரவுண்டுக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள் அதுபற்றிய விவரங்களை, நகர்ப்புற நில வரி அதிகாரியிடம் (அசிஸ்டெண்டு கமிஷனர்) தெரிவிக்கவேண்டும்.

"அவ்வாறு தகவல் தெரிவிக்கத் தவறுபவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நகர்ப்புற நில உரிமையாளர்கள், தங்களுக்குத் தேவையான தகவல்களை, தொடர்புள்ள நில வரி அதிகாரியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் படைமுன் தாக்குப் பிடிக்கமுடியவில்லை

பாகிஸ்தான் படைவீரர் அவலநிலை

தலைமைக்கு நிலைமையை விளக்கித் தளபதி அறிக்கை

முஜிபுர்நகர், ஆக. 28—

கிழக்கு வங்கத்தில் போர் புரியும் பாகிஸ்தான் படைகளின் மன உறுதி மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதாக அப்பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றிருக்கும் இராணுவத் தளபதி, பாகிஸ்தான் அரசுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிருர்; இந்த அறிக்கையின் நகல் ஒன்று, விடுதலைப் படையினரிடம் கிடைத்திருக்கிறது.

உணவுப் பற்றுக்குறை, போதிய தூக்கமின்மை ஆகியவை இராணுவத்தினரின் உற்சாகத்தைக் கடுமையாகப் பாதித்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"இராணுவத்தினருக்கு உதவி செய்வதாகக் கூறப்படும் ரசாக்கர்களை இனியும் நம்பிப் பயனில்லை" என்று தளபதி கூறியிருக்கிருர்.

தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்க ரசாக்கர்கள் சிறிதும் தயங்குவதில்லை" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

மக்களும் ஒத்துழைப்புத் தருவதில்லை என்றும் மாருக, இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளில்தான் மக்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கிருர்கள் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிழக்கு வங்கத்தின் புதிய பொம்மை அரசாலும், இராணுவ உயர் அதிகாரிகளாலும், இராணுவ வீரர்களுக்குப் புத்துணர்ச்சியும் துணிவும் ஊட்டி மனஉறுதியைக் கொடுக்க முடியவில்லை என்றும், அந்த அளவுக்குப் பாதகமான நிலைமை இருந்துவருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

விடுதலைப் படையினர் இரயில்—சாலை வழிகளை அழித்து வருவதால், எல்லாப் பொருட்களுக்கும் விமானங்களையே எதிர்பார்க்க வேண்டியிருப்பதாகவும் அந்தத் தளபதி பாகிஸ்தான் அரசிடம் முறையிட்டிருக்கிறது.

தென்னகத்தில் 115 புதிய கம்பெனிகள்

சென்னை, அக். 29—

1971 செப்டம்பர் 30-ந்தேதியுடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில் தென்னகத்தில் 115 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன. இவை பங்குகளால் வரையறுக்கப்பட்டவை. அவற்றின் மொத்த அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1,068 65 இலட்சமாகும்.

இந்த மூன்றுமாத காலத்திற்கு முந்தைய காலாண்டில் 110 கம்பெனிகள் பதிவாயின.

பரிசீலனைக் காலத்தில் தென்னகத்தில் பதினேழு கம்பெனிகள் மூடப்பட்டன; இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் மொத்தம் ரூ. 49.86 இலட்சமாகும்.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 3.12 இலட்சத்தடன்கூடிய 20 கம்பெனிகள் பரிசீலனைக் காலத்தில் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன; இரண்டு நிறுவனங்கள் இறுதியாக கலைக்கப்பட்டன.

பரிசீலனை காலத்தின் துவக்கத்தில் 1,060 வழக்குகள் தீர்க்கப்படாமல் இருந்தன; அதே காலத்தில் முறைதவறிய கம்பெனிகள்மீதும்-- அவற்றின் அதிகாரிகள்மீதும் 383 புதிய வழக்குகள் தொடரப்பட்டன.

பரிசீலனைக் காலத்தில் மொத்தம் 351 வழக்குகள் பைசல் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 58 இலட்சத்துடன் நான்கு பொதுக் கம்பெனிகளும், ரூ. 353.05 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் கூடிய 39 தனிப்பட்ட கம்பெனிகளும் பரிசீலனைக் காலத்தில் பதிவு செய்யப்பட்டன.

இதே காலத்தில் 7 கம்பெனிகள் மூடப்பட்டன: இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 29 70 இலட்சம்.

19 கம்பெனிகள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன; இவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 92 இலட்சம்.

பரிசீலனைக் கால துவக்கத்தில் 925 வழக்குகள் தீர்வு ஆகாமல் இருந்தன.

328 புதிய வழக்குகள் தொடரப்பட்டன; இவற்றில் 285 வழக்குகள் பரிசீலனைக் காலத்தில் தீர்வு செய்யப்பட்டன.

ஆசிரியர் நாள் விழாவில் அண்ணு படத்திறப்பு

சென்னை, அக். 29—

"புதிய சமுதாயத்தை உருவாக்குவோர் ஆசிரியர்கள்; அவர்களின் பணி மிகவும் மகத்தானது; ஆசிரியர்களைப் போற்றும் நாடு என்றென்றும் உயர்ந்த நிலையில் இருக்கும்; அகிலத்திற்கு உழைத்த பெரியார்கள் பலர் ஆசிரியர்களாகச் சிறிது காலமாவது பணியாற்றியிருக்கின்றனர்"

என்று தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. எஸ். வி. சிட்டிபாபு அவர்கள், வட சென்னையிலுள்ள கொ. சி. சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளியில் 16—10—71 அன்று நடைபெற்ற ஆசிரியர் நாள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், முன்னுள் குடியரசுத் தலைவர் திரு. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் முதலாக அறிஞர் அண்ணு அவர்கள்வரை, ஆசிரியர்களாகப் பணியாற்றியுள்ளதைச் சுட்டிக்காட்டினுர்; ஆசிரியர்களின் பணியின் சிறப்பை விளக்கிக் கூறினுர்.

விழாவிற்கு திரு. எஸ். இராசேந்திரன் தலைமைவகித்தார்.

திரு. டி எஸ். டி. இராசா அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்.

அறிஞர் அண்ணு அவர்களின் திருவுருவப் படத்தை, பள்ளியை நிறுவிய தர்மநிதியின் செயலாளர் திரு. அரு. சங்கரலிங்கம் திறந்து வைத்து, அறிஞர் அண்ணு அவர்களின் உயர்ந்த பண்புகளையும் -- பேச்சாற்றலையும் -- எழுத்தாற்றலையும் எடுத்துக் கூறினுர்.

பின், கல்வி இயக்குநர் திரு. எஸ். வி. சிட்டிபாபு அவர்கள், பள்ளியில் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ள ஆசிரியர்கள் புலவர் நாராயணபெருமாள், புலவர் இரா. வேங்கடராமன், திரு பி. பாண்டித்துரை, திருமதி இரத்தினவதி ஆகியோருக்கு -- பள்ளியை நிறுவிய தர்மநிதி வழங்கிய பொன்னுடைகளைப் போர்த்தி, அன்பளிப்புக்களை வழங்கினுர்.

இறுதியில், திரு. டி. ஏ. எம். ஏ. மாரிமுத்து, திரு. வெ. வெ. சு.பால்ராஜ் ஆகியோர் நன்றி கூறினர்.

பம்பாயில் விருத்தாசலம் செல்வராஜ்

மாபெரும் வரவேற்பு -- பொதுக்கூட்டம்

அண்ணு பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

பம்பாய் 88 மான்கூர்டு தி மு. கழகச் சார்பில் அறிஞர் அண்ணு அவர்களின் 63 ம் ஆண்டு பிறந்த நாள் விழாவும்—இப்பகுதி எம் ஜி ஆர். மன்றப் பணிமனைத் திறப்பு விழாவும் நடைபெற்றது.

16—10—71 மாலை 5-மணிக்கு தமிழகத்திலிருந்து வருலகதந்த தென்னுற்காடு மாவட்ட தி.மு கழகச் செயலாளர் எம். செல்வராசு எம்.எல்.ஏ. அவர்கள், சனதா காலனி பேருந்து நிலயத்திலிருந்து சிலம்பு ஆட்டங்கள் -- வாத்திய இசைகள் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

ஊர்வலம் எம். ஜி. ஆர். மன்றப் பணிமனை வந்து சேர்ந்ததும், செயலாளர் ப. சேகு மைதீன் தலைமையில் எம்.ஜி.ஆர். மன்றப் பணிமனையைத் திரு. எம். செல்வராசு திறந்துவைத்தார்.

மன்றத் தலைவர் வி. குப்புசாமி கொடியேற்றினுர்.

அண்ணு படத்தை மன்றப் பொருளாளர் எம். முனுசாமி திறந்துவைத்தார்.

மீண்டும் ஊர்வலம் தொடங்கி இரவு 8-மணிக்கு அண்ணு நகராண்மைத் திடலுக்கு வந்து சேர்ந்ததும் பொதுக்கூட்டம் தொடங்கியது; மான்கூர்டு தி. மு. க. துணைச் செயலாளர் கே. எஸ். அமீது வரவேற்ருர்; கழகச் செயலாளர் வி. கே. பாண்டுரங்கன் தலைமைதாங்கினுர்; அண்ணு உருவப் படத்தை பம்பாய் மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் திறந்து வைத்து உரையாற்றினுர்.

தோழர்கள் த மு. பொற்கோ, மான்கூர்டு கிளை அவைத் தலைவர் வ. பழனி, வ. து. தங்கமணி, கலைக் கூத்தன், வள்ளிநாயகம், கலைச் செல்வன், ஏ. எல். பெருமாள், கே. கே. ஏ. நாயர் (பம்பாய் துறைமுக ஐ. என். டி. யு. சி. நிர்வாகக் குழுச் செயலாளர்), ஏ. என், நாம் சோசி (பம்பாய் நகரக் காங்கிரசுத் தலைவர்), எச். என். திருவேதி (பம்பாய் நகர காங்கிரசுச் செயலாளர்) ஆகியோர் உரைக்குப் பின், எம். செல்வராசு அவர்களுக்கும்—வருகைதந்த நிர்வாகிகளுக்கும் கே. எஸ். அமீது கைத்தறி ஆடையும் மலர்மாலையும் அணிவித்தார்.

ப. சேகு மைதீன் கைத்தறி ஆடையும் -- மலர்மாலை அனைவருக்கும் அணிவித்த பின், மான்கூர்டு தி.க., மான்கூர்டு முஸ்லிம் லீக், மான்கூர்டு தமிழ்ச் சங்கம், என். பி. கே சோசியல் வெல்பர் சென்டர், கஸ்தூரிபாய் மாதர் சங்கம், பாரதி கலை மன்றம், தாராவி கிளை, மாதுங்கா கிளை, விக்ரோலி கிளை, சோகேசுவரி கிளை, அண்ணு குறள் வளர்ச்சி மன்றம், தாராவி--வடலா அறிஞர் அண்ணு நினைவுப் பள்ளி ஆகியவைகளின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின், திரு. எம். செல்வராசு, தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பம்பாயில் தமிழ் மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அரியதோர் கருத்துரை வழங்கினுர்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக ஏ. நைனு முகம்மது ரூ. 10; கே. சீனிவாசன் ரூ. 5; ஆர். நல்லு ரூ. 10; வி. கண்ணன் ரூ. 5.10 செல்வராசு அவர்களிடம் நிதி வழங்கப்பட்டன.

மன்றத் துணைச் செயலாளர் இ. காசிநாதன் நன்றி நவின்ருர்.

இனிப்பும் பொங்கல் திரு. எம். செல்வராசு வழங்கினுர்.

★

17—10—71 இரவு 8 மணிக்கு பம்பாய் சொ. கேசுவரி தி.மு.க. சார்பில் அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் கா. அப்துல் ரகிமான் வரவேற்ருர்; கழக அவைத் தலைவர் பி. ஜி அப்துல் அஜீஸ் தலைமை தாங்கினுர்.

திரு. எம். செல்வராசு எம். எல்.ஏ. அவர்கள் அண்ணு உருவ படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினுர்.

பம்பாய் மத்தியக் குழு செயலாளர் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, வ. பழனி, வி. கே. பாண்டுரங்கன், வீர. சுலைமான், கலைச்செல்வன், எம். இராசகோபால், அப்துல் ரசாக், கே. கே. ஏ. நாயர் ஆகியோர் உரைக்குப்பின் வருகை தந்த நிர்வாகிகளுக்குக் கழகத்தின் சார்பில் ஆர். எம். டி. இஸ்மாயில் மலர் மாலை அணிவித்தார்; மற்றும் கிளைகளும் மலர்மாலைகள் -- கைத்தறி ஆடைகள் அணிவித்தபின், பள்ளிச் சிறுவர்களுக்கு வி. நாராயணசாமி நோட்டுப் புத்தகம் -- எழுதுகோல் வழங்கினுர்.

பிச்சைக்கார மறுவாழ்வு நிதிக்கு எம். வி. சாமி ரூ. 5; பி. இ. அப்துல்பகீர் ரூ. 51; வி. நாராயணசாமி சேகர் ரூ. 51; யாகீன் ரூ 5 வழங்கினர்; கா. அப்துல் ரகுமான் ஒரு கோழியை நன்கொடை வழங்கினுர்; அதை இருநடவை ஏலம்விட்டதில் ரூ 70 கிடைத்தது; அத்தொகை அனைத்தையும் எம் செல்வராசு அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

திரு. எஸ் மணி நன்றி நவின்ருர்.

தர்மாம்பாள் நினைவுப் பேச்சுப் போட்டி

கல்லூரி மாணவர் பங்கேற்பு

சென்னை -- மாணவர் மன்றச் சார்பில் டாக்டர் தருமாம்பாள் நினைவுப் பேச்சுப் போட்டியையொட்டி, 'மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்கு நன்மையே தரும்' எனும் தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, 23—10—71-ல், மயிலை சிவமுத்து நிலையத்தில் நடைபெற்றது; கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

என். வி. என். சோமு, முரசொலி அடியார், மணிலிங்கம் ஆகியோர் நடுவர்களாக இருந்தனர்.

மன்றத் தலைவர் புலவர் கோ. வில்வபதி அனைவரையும் வரவேற்ருர்.

மன்றச் செயலாளர் கவிஞர் தணிகை உலகநாதர் நடுவர்களுக்கு மன்ற வெளியீடுகளை அன்பளிப்பாக வழங்கிப் பாராட்டுரையாற்றினுர்.

செயலாளர் புலவர் மி. ச. நடேசன் அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினுர்.

பதினுறு கல்லூரிகளின் சார்பில் மாணவர்கள் கலந்துகொண்டனர்; பரிசுபெற்ற மாணவர் விவரம் வருமாறு:—

சுழற் கேடயம்:—பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

முதற் பரிசு -- வெள்ளிக் கோப்பை:—கணேசன், இலயோலாக் கல்லூரி, சென்னை-34.

இரண்டாம் பரிசு -- வெள்ளிக் கோப்பை:—பீட்டர் அல்போன்ஸ், சட்டக் கல்லூரி, சென்னை.

மூன்றும் பரிசு -- தமிழ் நூற் பரிசு:—ஆ. ப. வேலுச்சாமி, அரசினர் கலைக் கல்லூரி, சென்னை-35.

ஆறுதல் பரிசு -- தமிழ் நூற் பரிசு:—குமாரி கே. விஜயா, அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, வடசென்னை.

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்பு

'மாணவர்கள் அரசியலில் பங்குகொள்வது நல்லதன்று' என்னும் தலைப்பில் உயர் பள்ளி மாணவர்க்கான பேச்சுப் போட்டி 24—10—71-ல் நடைபெற்றது.

புலவர் கவிஞர் தணிகை உலகநாதர் வரவேற்புரை ஆற்றினுர்.

புலவர் கோ. வில்வபதி நடுவர்களை அறிமுகப்படுத்தினுர்.

புலவர் ம. கி. பொன்னுசாமி, நடுவர்களுக்கு மன்ற வெளியீடுகளை அன்பளிப்பாக வழங்கினுர்.

புலவர் வஞ்சிக்கோவன் மாணவர்கட்குப் பரிசு நூல்களை வழங்கினுர்.

புலவர் மி. ச. நடேசன் நன்றி நவின்ருர்.

போட்டிகளில் 34 பள்ளிகளின் சார்பில் மாணவர் கலந்துகொண்டனர்; பரிசுபெற்றவர்கள் விவரம்:—

சுழற் கேடயம்:—சென்னைச் சேவா சதனம் உயர் பள்ளி, தாம்பரம்.

முதற் பரிசு -- வெள்ளிக் கோப்பை:— ந இராமலிங்கம், பி. ஏ. கே. பழனிச்சாமி உயர் பள்ளி, வண்ணை,

இரண்டாம் பரிசு -- வெள்ளிக் கோப்பை:—திலகவதி, அரசு உயர் பள்ளி, கோடம்பாக்கம்.

மூன்றும் பரிசு -- தமிழ் நூற் பரிசு:—என். காவேரி, மாநகராட்சிப் பெண்கள் உயர் பள்ளி, சைதை.

ஆறுதல் பரிசு -- தமிழ் நூற் பரிசு:—இராசா, சேவா சதனம் உயர் பள்ளி, தாம்பரம்; எஸ். மரகதம், மாநகராட்சிப் பெண்கள் உயர் பள்ளி, இராட்லர் தெரு. சூளை; ஆல்பிரடு, நன்முறை உயர் பள்ளி, சைதை.

கலைஞர்--மக்களிடம் 'டாக்டர்' பட்டம் பெற்று வெகுநாளாகிறது

இந்தப்பட்டத்துக்கு முழுக்க முழுக்க தகுதிப்படைத்தவர் அவர்

குறுகிய மூளைக்காரர் குற்றச்சாட்டை மன்னித்துவிடுவோம்

மத்திய அமைச்சர் மோகன் தாரியா பாராட்டுரை

சென்னை, அக். 28—

"தமிழக முதல்வர் -- கலைஞர் கருணாநிதி அவர்கள், 'டாக்டர்' பட்டம் பெற முழுக்க முழுக்கப் பொருத்தமானவர்; அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்த பல்கலைக் கழகம் பாராட்டுக்குரியது; 'டாக்டர்' பட்டம் கொடுத்ததை எதிர்ப்பவர்கள் குறுகிய மூளையுடையவர்கள் ஆவர்"

என்று மத்திய திட்டத்துறைத் துணையமைச்சர் திரு. மோகன் தாரியா கூறினுர்.

சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் ஆராய்ச்சிக்கு மாணவர்களால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்டு திரு. மோகன் தாரியா பாராட்டுரை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"பேராசிரியர் கருணாநிதி அவர்கள், அரசியல்வாதி மட்டுமல்லர்; ஓர் எழுத்தாளர் -- கவிஞர் -- திரைப்பட வசனகர்த்தா; இப்படிப் பல்வேறு சிறப்புக்களையும், திறமைகளையும் பெற்றவர்.

முதல்வர் அவர்களுக்கு இந்த மதிப்புக் கிடைப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே அவரது பெருந்தன்மைமிக்க சொல்லாலும் -- உறுதிமிக்க நடவடிக்கையாலும் -- திறமைமிக்க நிர்வாகத்தாலும், இந்தியா முழுவதும் மிகப் பெரிய மதிப்பைப் பெற்றுவிட்டார்.

தமது முற்போக்குப் பணிகளின் மூலம், நாட்டு மக்களிடம் மனிதாபிமானத்துக்குரிய ('ஹியூமானிடி') 'டாக்டர்' பட்டத்தை வெகு காலத்திற்கு முன்பே அவர் பெற்றுவிட்டார்!

நாடு இப்போது வெகு கடினமான காலக் கட்டத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறது.

இவர் உட்படப் பல்வேறு மாநில முதல்வர்கள், இந்தியாவை ஆக்கிரமிக்க எந்த ஆதிக்கத்தை -- அது எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும், 'எதிர்ப்போம்' என்று கூறிவிட்டார்கள்.

அண்மையில் நடந்த முதல்வர்கள் மாநாட்டில் முதல்வர் கருணாநிதியின் ஒரு சிறப்பைக் கண்டு நான் மகிழ்ந்தேன்; மத்திய அரசு விவசாய வருமான வரி விதிப்பதுபற்றி எல்லா முதலமைச்சர்களும் எதிர்த்தனர்; ஆயினும், முதல்வர் கருணாநிதியின் எதிர்ப்பு எப்படியிருந்தது? -- முதலில் அதை எதிர்த்த அவர், 'மத்திய அரசுக்கு இந்த நேரத்தில் எல்லா விதமான நிதி வாயில்களும் தேவைதான்; ஆகவே, அதன் விருப்பம்போல் செய்யட்டும்; ஆனால், பொது வருமான வரி உட்பட எல்லா வரிகளையும் நாங்களே (மாநில அரசுகள்) வசூலித்துத் தருகிறோம்' என்ருர்.

கவிஞரல்லவா -- தமது எதிர்ப்பைக்கூட முரட்டுத்தனம் இல்லாமல் எவ்வளவு இலாவகமாகக் கவிதை உணர்வோடு சொல்லுகிருர் என்பதைப் பார்த்து வியந்தேன்.

'அந்தக் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேனு' என்பது வேறு; ஆனுல், அதிலுள்ள நளினத்தையும் -- எஃகு போன்ற உறுதியையும் கண்டு மகிழ்ந்தேன்.

தமிழகம் தந்த மிகப் பெரிய தலைவர் அறிஞர் அண்ணு; அவர் மறைந்தார்; அவர் மறைந்த பின், 'என்ன நடக்குமோ -- தமிழகத்தின் ஒற்றுமை நிலைக்குமோ -- அவரைப் போன்ற தலைவர் ஒருவர் தோன்றுவாரா?' என்றெல்லாம் நாங்கள் எல்லாம் கவலைப்பட்டோம்.

ஆனுல், 'இந்தத் தமிழகம், அண்ணுவைப் போன்றே ஒரு திறமைமிக்க தலைவரை உண்டாக்கிக் காட்டும் -- அவர் அடிபின்பற்றும்' என்பதைக் கருணாநிதி மூலம் நிரூபித்துக் காட்டியது!

நான் டில்லியிலிருந்து வருகிறவன்; நமது நாட்டில் எத்தனையோ முதலமைச்சர்கள் இருக்கிருர்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திறமையைப் பெற்றிருக்கிருர்கள்.

ஆனுல், இப்படிப் பல திறமை படைத்து மக்களிடம் தமது பணியால் செல்வாக்குப் பெற்றிருக்கும் ஒரே முதலமைச்சர் டாக்டர் கருணாநிதிதான்!

அவருக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அளித்த பட்டத்திற்காக அதை நாம் பாராட்டவில்லை; உரியவருக்குத் தந்த அந்தப் பல்கலைக் கழகத்தின் ஞானத்தைப் பாராட்டுகிறோம்.

இந்தத் தலைவருடைய -- இந்த முதல்வருடைய -- இந்தக் கருணாநிதியினுடைய கரங்களில், தமிழகம் மத்திரமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழகத்தில் குடிசைவாழ் மக்களுக்காகக் குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது; 600 குடிசைப் பகுதிகளில் ஏழைகள் வாழ்கிருர்கள்; அவர்களுக்கு நல்ல குடியிருப்பை ஏற்படுத்த முதல்வர் முயல்வது பாராட்டிற்குரியது.

இந்த எண்ணம் எதனுல் அவருக்கு எழுந்தது? அழுத்தப்பட்ட -- ஒடுக்கப்பட்ட -- கீழ்த் தட்டு மக்களிடம் அவர் கொண்ட காதலே இதற்குக் காரணமாகும்.

கருணாநிதி செய்த இன்னொரு சாதனை, மாநிலத்திற்கெனத் தனியாக ஒரு திட்டக் குழு அமைத்தது; இந்தச் செய்தியால், 'நாடாளுமன்றத்தில் தீப்பொறி பறக்கப் போகிறது' என்று சிலர் சொன்னுர்கள்.

நான் சொன்னேன் -- 'மாநிலத்திற்குத் திட்டக்குழு அமைப்பது நமது திட்டக் குழுவின் திட்டம் தான்; நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் அதைத்தான் கூறுகிறது; அதற்கு முன்வழி காட்டியவர் கருணாநிதி' என்று!

'திட்டம்' என்பது, மேலிருந்து தொடங்குவதல்ல -- கீழிருந்து தொடங்கினுல்தான், அந்தத் திட்டம் மக்களுக்காக நடத்தப்படும் திட்டமாகும்.

இதை உணர்ந்து திட்டக் குழு அமைத்த கருணாநிதி, இந்தியாவுக்கே வழிகாட்டியிருக்கிருர்!

பொதுமக்கள் மட்டுமல்ல -- அறிவாளிகளும் நாட்டின் எண்ண அலைகளோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்; இதற்காக, அரசியல் கட்சிகளில் சேரச் சொல்லவில்லை; 'எண்ண அலைகள் எப்படிப்பட்ட வழியில் செல்ல வேண்டும்' எனக் கூறுபவர்களாக -- அதில் பங்கு பெற்று இணைபவர்களாகஇருக்க வேண்டும்.

அந்த வகையில், இங்குள்ள தி. மு. கழகம் அறிவுத் துறையில் தனது பணியை ஆற்றியிருக்கிறது!

தி. மு. கழகமே பேச்சாளர்களை —எழுத்தாளர்களை—செயல் வீரர்களை—கவிஞர்களைக் கொண்ட இயக்கமாக இருக்கிறது!

இந்த அளவில், சமுதாய எண்ண அலைகளைச் சரியான திசையில் திருப்பிய கருணாநிதி முழுக்க முழுக்க டாக்டர் பட்டத்துக்குப் பொருத்தமானவர்; இதை எதிர்ப்பது, குறுகிய மூளையின் குற்றச்சாட்டு!

அப்படி எதிர்ப்பவர்கள், அரசியல் கட்சிக்காரர்களாக இருந்தால் —'இது அவர்களது அரசியல்' என்று மன்னித்து விடுங்கள்! வேறு சிலராக இருந்தால்— 'தவருன வழியில் செலுத்தப்படுகிருர்கள்' என்று பரிதாபப்படுங்கள்!

இறுதியாக அவர், 'கருணாநிதி அவர்கள் நீண்டநாள் வாழ்ந்து, தமிழகத்துக்கு மட்டுமல்ல—இந்தியாவுக்கே வழிகாட்ட வேண்டும்' என வாழ்த்துகிறேன்."

தஞ்சை மாவட்ட சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநாடு

கிளைச் சங்க நிர்வாகிகட்கு வேண்டுகோள்:

1972 சனவரித் திங்களில், தஞ்சை மாவட்டச் சலவைத் தொழிலாளர் மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இம்மாநாட்டிற்கு முதலமைச்சர் டாக்டர் கலைஞர், கல்வி அமைச்சர் நாவலர், பிற்பட்ட நலத்துறை அமைச்சர் க. இராசாராம், நாடாளுமன்ற --- சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை நாராயணசாமி, கோ. சி மணி, மற்றும் நகராட்சித் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்காக சலவைத் தொழிலாளர்களையும் -- சங்க நிர்வாகிகளையும், நேரில் சந்தித்துப் பேசி, சலவைத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற டிசம்பர் மாதத்தில் திரு. சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி., வட்டம் தோறும் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருக்கிருர்.

ஆங்காங்குள்ள சலவைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் துண்டு அறிக்கைகளை வெளியிட்டு -- கூட்டங்களை ஏற்பாடு செய்து ஒத்துழைக்க வேண்டுமென சலவைத் தொழிலாளர்களை கேட்டுக்கொள்வதுடன், சலவைத் தொழிலாளர்களுக்கு இருக்கும் குறைகளை மேலவை உறுப்பினர் திரு. சி. ஆர். கோலப்பா அவர்களிடம் நேரில் தெரிவிக்க வேண்டுமெனும் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—

மாநாட்டு அலுவலகம், திரு. வி. பி. தனக்கோடி, தலைவர், மாநாட்டு வரவேற்புக் குழு, திருமஞ்சன வீதி, திருவாரூர் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

தெ. ஆ. மாவட்ட அடிப்படை சுகாதாரப் பணியாளர் சங்கம்

தமிழக அரசுக்கு நன்றி

"தமிழக அரசு அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்களுக்குத் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ரூ 150 முன்பணமாக வழங்கிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கட்கும் எங்களது நன்றியையும் -- பாராட்டுதலையும் சுகாதாரப் பணியாளர் சங்கச் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெ. ஆ. மாவட்ட அடிப்படைச் சுகாதாரப் பணியாளர் சங்கக் கௌரவத் தலைவர் பொன். செங்கலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிக்கிருர்.

பாண்டுப் தி. மு. க.

20—10—71-ல், பம்பாய் -- பாண்டுப் தி. மு. க. நிர்வாகிகள் தேர்தல், பம்பாய் மத்தியக் குழு ஆணையாளர் ஏ. எஸ். கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது; மா. ஈசாக் அவைத் தலைவராகவும், ப. க. முத்தையா செயலாளராகவும், எஸ். காசி துணைச்செயலாளராகவும், அந்தோணி தணிக்கையாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் -- மத்தியக் குழு உறுப்பினர்களும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ப. க. முத்தையா நன்றி உரைத்தபின் கூட்டம் முடிவு பெற்றது.

'இராசமன்னர் குழு அறிக்கையை ஆராய்கிறோம்'

'அதன் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு திட்டம் தீட்டுவோம்'

திட்ட அமைச்சர் சி. சுப்பிரமணியம் அறிவிப்பு

சென்னை, அக். 24—

"மத்திய -- மாநில அரசுகளுக்கிடையிலான உறவு குறித்து ஆராயும் பொருட்டுத் தமிழக அரசு நியமித்த இராசமன்னர் குழுவின் அறிக்கையை மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை மத்தியக் குழுவும் கருத்தில் கொள்ளும்"

என்ற தகவலை மத்தியத் திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இங்கு அறிவித்தார்.

நிதித் துறை நிர்வாகம் பற்றிய பயிற்சி நிலையத்தை மத்திய திட்ட அமைச்சரும் திட்டக்குழுத் துணைத் தலைவருமான சி. சுப்பிரமணியம் தொடங்கிவைத்துப் பேசுகையில் கூறியதாவது :—

"பொருளாதார வளர்ச்சியை, இனி ஊதியம் வழங்குவதை வைத்தும் -- விற்பனையை வைத்தும் நிர்ணயிக்க முடியாது ; சமுதாய—பண்பாட்டுத் துறையில் வளரும் மதிப்பீடுகளை வைத்துத்தான் நிர்ணயிக்க முடியும்.

இப்படிப்பட்ட செழிப்பு இல்லை என்றால், பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டுவிடும் ; சமூகத்தில் நெருக்கடிகளும் அதிருப்திகளும் ஏற்படும்.

உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சமுதாயச் சூழ்நிலை மிகவும் முக்கியம்.

வேற்றுமைகள் குறைந்து மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற குறிக்கோள்களை அடிப்படையாக வைத்துத்தான் நமது பொருளாதாரத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

சமுதாயத்தில் கீழ்த்தட்டில் உள்ளவர்கள் மேல்நிலைக்கு வரவும் --வட்டாரங்கள் ஏற்றத்தாழ்வின்றி முன்னேற்றம் பெறவும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன ; எனவே, இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு நிர்வாகிகள் இயங்கவேண்டும்.

வரவு -- செலவுத் திட்டத்தில் குறிக்கப்படுகின்ற அளவைக் காட்டிலும், பொதுத்துறை முதலீடுகள் குறைவாக உள்ளன ; வளர்ச்சித் திட்டங்களுக்கு ஈடு கொடுக்கிறவகையில் நிதி நிலை அமைப்பு அமைவதில்லை.

மத்திய அரசிலும் --- மாநில அரசுகளிலும் செயல் முறையை அடிப்படையாகக் கொண்டு வரவு -- செலவுத் திட்டம், சில இலாகாக்களில் செயல்படுத்தப்படுகிறது;இதன் மூலம் சில குறைபாடுகள் அகற்றப்படுகின்றன ; ஆனால் இத்துறையில் மேலும் முன்னேற்றம் தேவை.

அண்மைக்காலத்தில் வருவாய்த் துறையில் மாநில அரசுகளின் பொறுப்பு மிக அதிகமான அளவில் வளர்ந்து விட்டது ; இவ்வகையில், மத்திய--மாநில அரசுகளிடையே நிலவும் நிதி உறவு --- நடைமுறைகள் --- கண்ணோட்டம் -- நிர்வாகம் ஆகியவற்றை மேலும் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இதுபற்றித் திட்டக் குழுவில் உள்ள நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம் ; இதன் தொடர்பாக தமிழக அரசு நியமித்த இராசமன்னர் குழு கடைப்பிடித்த அணுகும் முறையைத் திட்டக் குழுவும் கருத்தில் கொள்ளும்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து நடைபெறும் இடைத் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்றுவிட்டதாகப் பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அவாமி லீக் உறுப்பினர்களில் 78 பேர்களின் தேர்வை யாகியாகான் செல்லுபடியற்றதாக்கி விட்டதைத் தொடர்ந்து இந்த இடங்களுக்கு மறு தேர்தல் நடத்தப்படுகிறது.

டிசம்பரில் நடைபெறவிருக்கும் இந்தத் தேர்தலில் வேட்பு மனு திரும்பப் பெறுவது நேற்றுடன் முடிந்துவிட்டது.

தகுதியிழந்த தைவான் அதிபரின் புலம்பல்

தைப்பே, அக். 29 —

"ஐ. நா. சபையில் உறுப்பினராக இருக்கும் தகுதியை நாங்கள் இழந்துவிட்டாலும், குமாய் -- மட்சு போன்ற தீவுகளைக் கைவிடும் பேச்சே இல்லை"

என்று, 'சீனக் குடியரசுத் தலைவர்' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் தைவான் நாட்டு அதிபர் சியாங் -- கே -- ஷேக் அறிவித்திருக்கிறார்.

மேலும் அவர், தமது இராணுவ சக்தியை மேலும் பெருக்கவும் புதிய நிலைகளை அமைத்தும் சீனக் கம்யூனிஸ்டுகளை அழித்து ஒழிப்பதில் தீவிரமாக முனையப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் புதிய முனைகள் என்ன என்பதற்கு விளக்கம் தரப்படவில்லை.

வட்டார ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படும்

திட்டம் தீட்டுவதில் ஒரே சீரான முறை

மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் தரும் தகவல்

சென்னை, அக். 28 —

சென்னையில் மத்திய திட்ட அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் குழுவின் கூட்டம் டில்லிக்கு வெளியே நடைபெறுவது இதுதான் முதல் தடவை.

குழுவின் முன்னர் பேசுகையில் மத்திய திட்ட அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியதாவது :—

"கடுமையான சோதனைகள் ஏற்பட்டபோதிலும் கூடத் திட்டங்களில் வெட்டு எதுவும் ஏற்படாது. வங்க அகதிகள் நிவாரணத்துக்குத் தேவையான நிதியினையும் நாம் திரட்ட வேண்டும்.

இதன் அடிப்படையில்தான் மத்திய அரசு, அவசரச் சட்டங்களின் மூலம் வரி விதித்துள்ளது.

வட்டாரங்கள் இடையே உள்ள வேறுபாட்டைப் போக்குவதற்கு ஒரே சீரான திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

எல்லா இடங்களிலும் ஒரே சீரான முன்னேற்றம் ஏற்படச் செய்வதும், கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும்தான் இனி முக்கிய குறிக்கோள்களாக இருக்கும்."

புதுவையில் மத்தியப் பல்கலைக் கழகம் அமையுமா?

யோசனையை நிறுத்திவைக்க அரசு முடிவு

நிலைமையைப் பரிசிலிக்கக் குழு அமைப்பு

பாண்டிச்சேரி, அக். 29—

பாண்டிச்சேரியில் மத்தியப் பல்கலைக் கழகம் நிறுவுவது என்ற யோசனையை நிறுத்திவைப்பதெனப் பாண்டிச்சேரி அரசு முடிவு செய்தது.

நேற்று முதலமைச்சர் எம். ஓ. எச். பாருக் தலைமையில் அமைச்சரவையின் அவசரக் கூட்டம் நடைபெற்றபோது இந்த முடிவு செய்யப்பட்டது.

பாண்டிச்சேரிக்கு ஒரு பல்கலைக் கழகம் அமையுமானால் -- அப்படி அமையுமானால் அதன் பெயர் என்னவாக இருக்கவேண்டும் என்பதைப் பற்றிப் பரிசிலனை செய்ய ஒரு குழுவை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

இந்தக் குழுவில் அரசாங்கம்—பொதுமக்கள்—மாணவர்கள் ஆகிய முத்தரப்பினரின் பிரதிநிதிகளும் இருக்கின்றனர்.

அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில் நிருபர்களிடம் இந்த முடிவை முதலமைச்சர் பாருக் அறிவித்தார்.

"பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள்பற்றி விவரமாக விவாதித்த பின்பும், மாணவர்களும்—சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினரும் தெரிவித்த கருத்துக்களைப் பரிசீலனை செய்த பின்பும் அமைச்சரவை இந்த முடிவுக்கு வந்தது" என்றும் அவர் அறிவித்தார்.

"இனி, மேற்கண்ட குழுவின் அறிக்கை கிடைத்த பின்பே மேல் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவர் சொன்னார்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

அக். 31 காலை 9-மணி : திருச்சி —தொழுநோய் நிவாரண சங்கம் -- காந்தி நினைவு மருத்துவமனை புதிய கட்டடத் திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல் ; மாலை 6-மணி : மணப்பாறை வட்டம் அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு முழுமை விழா.

நவ. 1 : கோயம்புத்தூர்.

நவ. 2 : உதகமண்டலம்—சிறு காடுபடு பொருள்கள் குறித்த கருத்தரங்கு.

உணவு உற்பத்தி அதிகரிப்பு

இரும்பு -- பஞ்சுப் பற்றுக்குறையால் தொழில் உற்பத்தி பாதிப்பு

திட்டக் குழுவின் ஆய்வு அறிக்கையின் மதிப்பீடு

சென்னை, அக். 29—

"இரும்பு -- மற்றும் நூல் பற்றுக்குறை காரணமாகத் தொழில் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது ; ஆனால், உணவு உற்பத்தி, குறியளவைத் தாண்டிவிட்டது"

என்று திட்டக் குழுவின் ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

1968-ல் 90.01 மில்லியன் டன்னாக இருந்த உணவு உற்பத்தி, 1971-ல 107.82 டன மில்லியன் டன்னாக உயர்ந்துவிட்டிருக்கிறது.

தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரையில, 1969-70-ல வளர்ச்சி வேகம 6.80 சதவிகிதமாக இருந்தது ; ஆனால, 1970-71-ல் 3.50 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது ; நான்காவது திட்டக் குறிப்படிப்படி, இந்த வேகம 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம்வரை அதிகரித்திருக்க வேண்டும்.

தொழில உற்பத்திக் குறைவுக்கு இரும்பு -- பஞ்சுப் பற்றுக் குறையே முக்கியக் காரணமாகும்; இந்தப் பற்றுக்குறைக்கு நிர்வாகக் குறைபாடுகளும், இரும்பு ஆலைகளில ஏற்பட்ட இயந்திரக் கோளாறுகளும், மற்றும் கிழக்குப் பகுதியில தொழிலாளர் பிரச்சினைகளுமே காரணமாகும்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

நவ. 1 காலை 10-மணி : திருவண்ணாமலை—உண்ணாமுலையம்மன வழிபடுவோர் விடுதிகளைத் திறந்துவைத்தல ; மாலை 4-மணி : திருவண்ணாமலை கூட்டுறவு நகரப்புற வங்கியின 60-வது ஆண்டு நிறைவு வைர விழாவில கலந்துகொள்ளல.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

அக். 31 காலை 8-மணி : திருச்சி —காந்தி நினைவு தலைமை மருத்துவமனையில் தொழு நோய்ப் பிரிவு -- புதிய கட்டடம் திறத்தல் ; 9-மணி; கரூா—திருமணம ; மாலை 6-மணி : மணப்பாறை—மின் இணைப்பு முழுமை விழா.

நவ. 1 காலை 9-மணி : லால்குடி —நிலவள வங்கி கட்டடக் கால்கோள் விழா ; முற்பகல் 11-மணி : புதூர்—உத்தமனூர் உழவர் பயிற்சி நிலையம காலகோள் விழா; மாலை 4-மணி : வெள்ளனூா—விவசாயக் கிடங்குத் திறப்பு.

நவ. 2 காலை 10-மணி : கயத்தார்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு -- மேல நிலை நீர்த்தேக்கத் திறப்பு -- சீரணி அறிவகக் கட்டடக் கால்கோள் விழா ; பிற்பகல் 3-மணி ; சாயமலை—பிறபட்டோர் மாணவர் விடுதி துவக்க விழா ; மாலை 5-மணி : குருவிகுளம்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு ; இரவு 7-மணி; குருஞ்சாககுளம—அறிஞர் அண்ணா நினைவுப் பள்ளித் திறப்பு ; 8-மணி : வெள்ளாகுளம்—தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி திறப்பு ; 9-மணி : கலிங்கப்பட்டி —பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 3 காலை 9-மணி : திருவைகுண்டம்—திருமணம ; முற்பகல் 11-மணி : திருவைகுண்டம ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் -- அறிஞர் அண்ணா படத் திறப்பும் ; பிற்பகல 2-மணி : புதுக்குளம—ஊராட்சி ஒன்றியப் பள்ளி திறப்பு ; 2-30 மணி : கீழதிடியூர்—ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திறப்பு ; 3-30 மணி : முன்னீர்பள்ளம—அறிஞர் அண்ணா, தேவர் சிலைகள் திறப்பு -- குடிநீர் வழங்கு திட்டக் காலகோள் விழா.

நவ. 4 காலை 9-மணி : சேலம்—கூட்டுறவு நூற்பாலை விசைத்தறி பாவு ஆலை கால்கோள் விழா ; 10-மணி : சேலம் -- அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் சங்க வரவேற்பு ; மாலை 5-மணி ; தந்தை பெரியார் 93 வது பிறந்த நாள் விழா ; இரவு 7-மணி ; பொதுமக்கள் வரவேற்பு.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31--10--71

மாயூரம்

கூறை நாடு ஆசிரியர் வேலாயுதம் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு இரயிலடிக் கடை வீதியில்; தலைவர்: என்.எஸ். சுந்தரம்; பேசுவோர்: மன்னை ம. நாராயணசாமி எம். எல். சி., கோ. சி. மணி எம்.எல்.சி , என். கிட்டப்பா எம்.எல்.ஏ., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., தம்பி தேவேந்திரன் எம்.எல்.ஏ., இரா. ஜோசப், அ. செங்குட்டுவன், ஜி.கே. மூர்த்தி.

பெங்களூர்

20-வது வட்ட தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் -- காந்தி பிறந்த நாள் விழா ; டாக்டர் டி. சி. எம். ரயான் சாலை உருதுப் பள்ளித் திடலில் ; தலைவர் : எஸ். வி. பதி ; பேசுவோர் : இராணி -- அண்ணாதுரை எம். எல்.சி., முன்னாள் முதல்வர் வீரேந்திர பட்டீல், திருமதி விஜயா இளங்கோவன், கே. எம். சம்பங்கி ராமையா, புலவர் புலமைப்பித்தன், எஸ். எஸ். இளங்கோவன், தி. திராவிடமணி எம்.சி., பாலசுந்தரம் எம்.சி., பி. வி. நாராயணன்.

பம்பாய்

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா ; மாலை 7-மணிக்கு இந்தியன் ஜிம்கானா [illegible]மாறன் அரங்கில் ; தலைவர் : வெ. கலைக்கூத்தன் ; பேசுவோர் : புலவர் பொன்னிவளவன், கவிஞர் வடுவூர்த்தம்பி, ஆர். டி. பண்டாரே எம்.பி., திருமதி கமலா ராமன் எம்.பி., எஸ். தியாகராசன், மற்றும் பலர். (புலவர் பொன்னிவளவன் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெறும்).

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (34, [illegible] செங்குத் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.